# உங்கள் பணத்தை எவ்வாறு செலவழிக்க வேண்டும் என்பதை உங்களுக்குத் தெரிந்த ஒருவர் கட்டுப்படுத்துகிறாரா, குடும்பத்தையும், நண்பர்களையும் பார்க்கக்கூடிய உங்கள் சுதந்திரத்தைத் தடுக்கிறாரா அல்லது உடல் ரீதியாக துன்புறுத்துகிறாரா?

நியூ சவுத் வேல்ஸ் முதுமை மற்றும் ஊனத்தின் பேரில் நடக்கும் கொடுமைக்கான உதவி அழைப்பு என்பது ஒரு வயதான நபர் அல்லது ஊனமுற்ற பெரியவர், அவருடைய வீட்டுக்குள்ளேயோ அல்லது அவர் சார்ந்த சமுதாயத்திலேயோ அவருக்கு தெரிந்த ஒருவரால் கொடுமைப்படுத்தப்படுவது மற்றும் மோசமாக நடத்தப்படுவதுமான ஆதங்கங்கள் பற்றிப் பேசுகின்ற எந்தவொரு நபருக்குமானது.

**1800 628 221** என்ற தொலைபேசி எண்ணுக்கு அழைக்கவும் (திங்கள்-வெள்ளி, 9-5). உங்களுக்கு ஒரு மொழிபெயர்த்துரைப்பாளர்தேவைப்பட்டால் **131 450** என்ற தொலைபேசி எண்ணுக்கு அழைக்கவும்.

உங்கள் வீட்டிலும், சமூகத்திலும் நீங்கள் பாதுகாப்பாக உணரவும் மற்றும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடத்தப் படவும் உங்களுக்கு உரிமை உண்டு.

உதவி அழைப்பைத் தொடர்பு கொள்வதன் மூலம் உங்களுக்குக் கிடைக்கக்கூடியவை:

**1.** உதவி கிடைக்க என்னென்ன சேவைகள் உள்ளன என்பது குறித்த தகவல்களைப் பெறலாம்.

**2.** உங்கள் கவலைகளைப் பற்றி பயிற்சி பெற்ற நிபுணரிடம் பேசலாம்.

**3.** அநாமதேய அறிக்கை தயாரிக்க ஆதரவளிக்கப்படலாம் மற்றும் தீர்ப்பளிக்காமல் நியாயங்கள் கேட்கப்படலாம்.

NSW GOVERNMENT

**ageingdisabilitycommission.nsw.gov.au** என்ற மின்னஞ்சல் மூலம் எப்போது வேண்டுமானாலும் இணையத்தில் விசாரித்துக் கொள்ளவும்.

அவசரகாலத் தேவைக்கு எப்போதும் 000 என்ற தொலைபேசி எண்ணுக்கு அழைக்கவும் அல்லது பேரிடர்கால ஆதரவுக்கு 13 11 14 என்ற தொலைபேசி எண்ணுக்கு அழைக்கவும்
தேசியத் தொடர் சேவை 1800 555 660 | Text Telephone 133 677